செய்தி வெளியீடு எண்: 671 நாள் : 15.12.2015

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் இன்று (15.12.2015) தலைமைச் செயலகத்தில், தமிழகத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு கீழ்க்கண்டவர்கள் நிதியுதவி வழங்கினார்கள்.

1. மக்கள் குரல் மற்றும் Trinity Mirror நாளிதழின் ஆசிரியர் மற்றும் வெளியீட்டாளர் திரு. ஆர். முத்து குமார் அவர்கள், மக்கள் குரல் நாளிதழின் சார்பில் 3 லட்சம் ரூபாய் மற்றும் Trinity Mirror நாளிதழின் சார்பில் 3 லட்சம் ரூபாய், என மொத்தம் 6 லட்சம் ரூபாய்.

2. NAC ஜுவல்லர்ஸ் மேலாண்மை இயக்குநர் திரு. அனந்தபத்மநாபன் அவர்கள் 25 லட்சம் ரூபாய்.

3. கரூர் வைஸ்யா வங்கியின் (Karur Vysya Bank) மேலாண்மை இயக்குநர் திரு.கே. வெங்கட்ராமன் அவர்கள், கரூர் வைஸ்யா வங்கியின் சார்பில் 2 கோடி ரூபாய் மற்றும் வங்கி பணியாளர்களின் ஒருநாள் சம்பளமான 1 கோடி ரூபாய், என மொத்தம் 3 கோடி ரூபாய்.

4. செட்டிநாடு சிமெண்ட் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.எம்.ஏ.எம்.ஆர். முத்தையா (அய்யப்பன்) அவர்கள் 3 கோடி ரூபாய்.

5. கோயம்புத்தூர், லஷ்மி மெஷின் ஒர்க்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. சஞ்சய் ஜெயவர்த்தனவேலு அவர்கள் 2 கோடி ரூபாய்.

6. சக்தி மசாலா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.பி.சி. துரைசாமி மற்றும் இயக்குநர் திருமதி. டி. சாந்தி ஆகியோர் 1 கோடி ரூபாய்.

7. GRT ஜுவல்லர்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் இயக்குநர்கள் திரு. ஜி.ஆர். அனந்தபத்மநாபன் (ஆனந்த்) மற்றும் திரு.ஜி.ஆர். ராதாகிருஷ்ணன் ஆகியோர் 1 கோடி ரூபாய்.

8. நிசான் மோட்டார் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் சார்பில் நிசான் இந்தியா ஆபரேஷன்ஸ் தலைவர் திரு. கியோம் சிகார் அவர்கள் (Nissan India Operations – President Mr. Guillaume Sicard) 1 கோடி ரூபாய்.

9. கோயம்புத்தூர், பி.எஸ். கோவிந்தசாமி நாயுடு & சன்ஸ் தொண்டு நிறுவனத்தின் நிர்வாக அறங்காவலர் திரு. எல். கோபாலகிருஷ்ணன் அவர்கள் 1 கோடி ரூபாய்.

தமிழகத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வுக்காக மொத்தம் 12 கோடியே 31 லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு இன்று (15.12.2015) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் அளிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு இதுவரை வழங்கப்பட்ட தொகை 111 கோடியே 8 லட்சத்து 22 ஆயிரத்து 745 ரூபாயாகும்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.
நாள்: 15.12.2015